நாகப்பட்டினத்திலுள்ள தொழில் பயிற்சிப் பள்ளி

*905 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்காவில் உள்ள இண்டஸ்ட்ரியல் ட்ரெயினிங் இன்ஸ்டிடியூட் (I.T.I.) எந்த ஆண்டில் அமைக்கப் பட்டது?

(இ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் அதில் பயிற்சி பெறும் மாணவர் களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) 1958-ஆம் ஆண்டில்.

(இ) முறையே 363, 376.

திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இந்த நாகப்பட்டினத்தில் அமைத்திருக்கும் இன்டஸ்ட்ரியல் டிரெயினிங் இன்ஸ்டியூட் போன்ற தொழில் பயிற்சிக் கூடங்களை மிகவும் பின்தங்கிய நன்னிலம் தாலுக்கா போன்ற தாலுக்காக்களில் அமைப்பதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுதிருக்கும் இந்த ஐ.டி.ஐ. யிலேயே ஏராளமாகப் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினு எண் 906 மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளின்படி தள்ளிவைக்கப்படு கிறது.

காணுங்காட்டைச் சார்ந்த நிலங்கள்

*907 வினு.—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னூர்க்காடு மாவட்டம், காணுங்காடு, என்ற காடு 3,500 ஏக்கர் அளவுள்ள நிலத்தில் அரசு பண்ணை ஏற்படுத்தலாம் என்று மாவட்ட ஆட்சி யாளர் அரசுக்கு தெரிவித்துள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.